# இந்த ஐந்து காரியங்களைக் குறித்து சிந்தி

## (THINK ON THESE 5 THINGS)

**1. நீ ஒரு பாவியாயிருக்கிறபடியால், உனக்கு இரட்சகர் தேவை:**

பாவத்தைக்குறித்து உன் சொந்த அனுபவத்தோடு கூட இங்கேயுள்ள சில முக்கிய வேத பாகங்களை கவனி,

"பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே"
(1இராஜ. 8: 46)

"எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி" (ரோமர் 3: 23).

"இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று" (ரோமர் 5: 12).

**2. தன்னைத்தானே இரட்சிப்பு அடைய நீ உதவியற்றவனாகையால், இரட்சகர் உனக்குத்தேவை:**

ஒரு மனிதன் தன்னுடைய நற்கிரியைகளினால் இரட்சிப்பு அடையலாமென்று நாம் நினைப்பது இயற்கை, ஆனால் கிறிஸ்துவால் மட்டுமே இரட்சிக்க முடியும்.

"பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கி கரிப்புக்கும் பாத்திரமுமானது". (1 தீமோத்தேயு 1: 15)

"இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார்". (லூக்கா 19: 10)

"அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்". (மத்தேயு 1: 21)

**3. இரட்சகர் உன்னில் இல்லாதிருந்தால் நீ அழிந்து போவாய், எனவே அவர் உனக்குத் தேவைப்படுகிறார்:**

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது மறுதலித்தல், இரட்சிப்படைதல் அல்லது இரட்சிப்படையாதிருத்தல், மோட்சத்திற்குச் செல்லுதல் அல்லது நரகத்திற்கு போகுதல் என இரண்டு வகுப்புகள் அல்லது இரண்டு விதிகள் தான் உண்டு. வேதம் சொல்லுகிறது:

"குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன் மேல் நிலைநிற்கும்". (யோவான் 3: 36)

"நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்". (லூக்கா 13: 3)

"தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்". (யோவான் 3: 16)

**4. இரட்சகரை ஏற்றுக்கொண்டு, இரட்சகருடைய பிள்ளையாக மாறு:**

கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தாரென்பதை நீ விசுவாசிக்க வேண்டும்.

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும், தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்". (யோவான் 1: 12)

"கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்". (அப். 16: 31)

"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்". (ரோமர் 10: 9)

இப்பொழுது நீ முழு இருதயத்தோடும் சொல்ல ஆயத்தமா?

நான் ஒரு பாவி, என் பாவத்தினால், அவருடைய நியாயத்தீர்ப்பிலிருந்து தப்புவதற்கு நான் ஒன்றும் செய்யவில்லை, இயேசுகிறிஸ்துவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வேன், என் பாவங்களை நான் அறிக்கை பண்ணுவேன் என்று சொல்ல ஆயத்தமா? அப்படியானால் உன் பெயரை இங்கு எழுது.

**5. இப்பொழுது நீ உன் இரட்சகரை நேசி, அவரை வணங்கு, அவருக்கு ஊழியம் செய்:**

ஒருவரும் தங்கள் சொந்த கிரியையினால் இரட்சிப்படைய முடியாது. ஏனென்றால் இரட்சிப்பு: "ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" (எபேசி 2: 9) இப்பொழுது நீ இரட்சிக்கப்பட்டால், "நற்கிரியைகளை செய்ய ஜாக்கிரதையாயிருக்கும்படி". (தீத்து 3. 8). நீ கிறிஸ்துவிற்கு உன் நன்றியை உன் கிரியையினால் காட்டும்; தேவ நம்பிக்கை உள்ளவ

ளாகவும், பலனுள்ள நல்ல ஒரு கிறிஸ்தவனாகவும் இரு. அப்படியே நீ அந்த முடிவுக்கு வர கீழே கொடுக்கப்பட்டிருக்கும் சில வேத பாகங்கள் உனக்கு உதவும்.

**துதி:** "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்" (சங். 34: 1).

**ஜெபம்:** "சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும்". (லூக்கா 18: 1)

**படி.:** "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு". (2 தீமோத்தேயு 2: 15)

**ஐக்கியம்:** "சபை கூடி வருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல்". (எபிரேயர் 10: 25)

**சாட்சி:** "என் நாவு உம்முடைய வசனத்தை விவரித்துச் சொல்லும்". (சங். 119: 172)

**The Light of Hope**
Cheppad P.O., Alappuzha Dist - 690 507
Kerala State, India